வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 22.6.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

**தலைப்புச் செய்திகள்**

ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு இடையே மோதல் அதிகரித்து வருவது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி கவலை வெளியிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இரண்டு நாள் பயணமாக சத்தீஸ்கர் மாநிலம் சென்றுள்ளார்.

புதுச்சேரியில், உதவியாளர் பணியிடங்களுக்கான 2 ஆம் நிலை எழுத்துத் தேர்வு இன்று நடைபெற்றது.

புதுச்சேரி சமுதாய கல்லூரியில் 2025-26 ஆம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான கடைசி தேதி இம்மாதம் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

***மோடி-ஈரான் அதிபர் (8)***

பிரதமர் திரு நரேந்திர மோடி ஈரான் அதிபர் திரு மசூத் பேசெஸ்கியானுடன் இன்று தொலைபேசியில் உரையாடினார். இதுகுறித்து சமூக ஊடகத்தில் தெரிவித்துள்ள பிரதமர், ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு இடையே மோதல் அதிகரித்து வருவது குறித்து ஈரான் அதிபரிடம் தமது கவலையை

தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும், தற்போதைய நிலவரங்கள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியதாக குறிப்பிட்டுள்ளார். பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை நிலைநிறுத்த உரையாடல்கள் மற்றும் ராஜாங்க முறையிலான நடவடிக்கைகள் அவசியமானது என்று மீண்டும் பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

***<u>பிரதமர் யோகா (10)</u>***

யோக கலையை தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாக மாற்றும் இயக்கமாக வலுப்படுத்தியமைக்கு ஆந்திர பிரதேச மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். நேற்று விசாகப்பட்டினத்தில் 3 லட்சத்து 105 பேர் ஒன்று கூடி யோகா பயிற்சி செய்து கின்னஸ் சாதனை படைத்ததை மேற்கொள் காட்டி பேசியுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, யோகாந்திரா முன்னெடுப்புகள் மற்றும் விசாகப்பட்டினத்தில் தாம் பங்கேற்ற யோகா கின்னஸ் உலக சாதனை நிகழ்ச்சி சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேற்கொள்ள மக்களுக்கு எப்பொழுதும் சிறந்த ஊக்கமாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். யோகா மக்களை மீண்டும் ஒருங்கிணைக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

***<u>பதினோராம் ஆண்டு (7)</u>***

இந்தியா, கடந்த 11 ஆண்டுகளில், சேவை, நல்லாட்சி, ஏழைகள் நலன் என்ற கொள்கைகளின் அடிப்படையில், புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்துள்ளது. இந்த 11 ஆண்டுகளில், பல்வேறு முக்கிய துறைகளில் அரசு மேற்கொண்ட முக்கிய முயற்சிகள் குறித்து, ஆகாஷ்வாணி சிறப்பு தொடர் ஒன்றை வழங்குகிறது. அந்த வரிசையில், இந்தியாவின் எரிசக்தி புரட்சி மற்றும் கடந்த 10 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட துணிச்சலான சீர்திருத்தங்கள் குறித்த, ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ்)

**பதினோராம் ஆண்டு வாய்ஸ் 1 (18)**

கடந்த 10 ஆண்டுகளில் அதிகரித்து வரும் தேவையை கருத்தில் கொண்டு பெரிய அளவிலான உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வழக்கமான மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களுக்கான வலுவான கொள்கைகள் மூலம் நாட்டின் மின்சாரத்துறை அபரிமிதமான வளர்ச்சியை கண்டுள்ளது. ஜூன் 2025 நிலவரப்படி, நாட்டின் மொத்த நிறுவப்பட்ட மின்சக்தி 476 கிகாவாட்டை எட்டியுள்ளது. இதில் பாதிக்கும் அதிகமான மின்திறன் புதை படிவம் அல்லாத எரிபொருள் மூலம் எட்டப்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க வல்ல எரிசக்தி மூலம் மட்டும் 226 கிகாவாட்ஸ் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, உலக அளவில் இந்தியா தற்போது சூரிய மின்சக்தி உற்பத்தியில் 3 ஆம் இடத்திலும், காற்றாலை மின் உற்பத்தி திறனில் 4 ஆம் இடத்திலும் உள்ளது. ஏப்ரல் 2018 ல் நாட்டில் உள்ள அனைத்து

கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டு, நூறு சதவிகித கிராம மின்மயமாக்கலை எட்டியுள்ளது. மேலும் 2.8 கோடி வீடுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு 4 சதவிகிதமாக இருந்த மின் பற்றாக்குறை தற்போது 0.1 சதவிகிதமாக குறைந்துள்ளது. பிரதமரின் சூரிய கர் எனும் வீடுகளுக்கான சூரிய ஒளி திட்டம் வீடுகளுக்கு வெளிச்சம் வழங்குவதோடு, பிரதமரின் குசும் திட்டம் விவசாயிகளை சூரிய சக்தி நீர்பாசன முறையால், அதிகாரம்

***பதினோராம் ஆண்டு வாய்ஸ்* 2 (9)**

மிக்கவர்களாக மாற்றுகிறது. காற்றாலை மின் உற்பத்தி துறை, 2 மடங்குக்கும் அதிகமான வளர்ச்சி கண்டுள்ளது. நீர் சக்தி, பயோமாஸ் மற்றும் அணுசக்தி துறைகளின் திறன் சீரான வளர்ச்சி கண்டுள்ளது. இந்தியாவின் நிலக்கரி துறை நவீன மயமாக்கப் பட்டு, சுயசார்பு மற்றும் நிலைத்தன்மையை எட்டியுள்ளது. மேலும், உற்பத்தி அளவில் சாதனை நிகழ்த்தப்பட்டு, இறக்குமதி சார்புநிலை குறைந்துள்ளது. தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் முதல், சர்வதேச சோலார் கூட்டணி வரை, இந்தியா தமது எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டும் அல்லாமல், தூய்மையான, பசுமையான எதிர்காலத்தை நோக்கி வழிநடத்துகிறது.

***அமித் ஷா* (12)**

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இரண்டு நாள் பயணமாக சத்தீஸ்கர் மாநிலம் சென்றுள்ளார். இன்று மாநில தலைநகர் ராய்பூரில் தேசிய தடய அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் மத்திய தடய அறிவியல் பரிசோதனை கூடத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார். இந்த தடயவியல் பல்கலைக்கழகம் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட உள்ளது. மேலும், உள்துறை அமைச்சர், சத்தீஸ்கர் மற்றும் அதனை ஒட்டி உள்ள மாநிலங்களின் பாதுகாப்பு தொடர்பான விஷயங்கள் குறித்து மாநில காவல் தலைமை இயக்குநர் மற்றும் கூடுதல் தலைமை இயக்குநருடன் ஆலோசனை நடத்த உள்ளார். மேலும், இடதுசாரி பயங்கரவாதம் குறித்த மறு ஆய்வுக் கூட்டத்திலும் பங்கேற்க உள்ளார்.

நாளை நாராயண்பூர் மாவட்டத்தில் கிராம மக்களுடனும், இர்க்பத்தி பகுதியில் உள்ள எல்லைப் பாதுகாப்பு படை வீரர்களுடனும் கலந்துரையாட உள்ளார்.

**தேர்வு (3)**

புதுச்சேரி பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையில் காலியாக உள்ள 256 உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான 2 ஆம் நிலை எழுத்துத் தேர்வு இன்று நடைபெற்றது. இது குறித்த கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

**தேர்வு வாய்ஸ் (7)**

28 மையங்களில் நடைபெற்ற இந்த தேர்வை 10 ஆயிரத்து 416 பேர் எழுதினர். புதுச்சேரியில் பாரதிதாசன் மகளிர் கல்லூரி, வள்ளலார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவள்ளுவர் அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி உள்ளிட்ட 22 மையங்களிலும், காரைக்காலில் 3 மையங்களிலும், ஏனாமில் 2 மையங்களிலும், மாகியில் ஒரு மையத்திலும் இத்தேர்வு நடைபெற்றது. இதற்கான முதல் நிலை எழுத்துத் தேர்வு கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி நடைபெற்றது.

**புதுவை பல்கலைக்கழகம் (14)**

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சமுதாய கல்லூரியில் 2025-26 ஆம் கல்வியாண்டில் சேர்வதற்கான கடைசி தேதி இம்மாதம் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. சமுதாய கல்லூரியில் தேசிய கல்விக் கொள்கை – NEP-யின் கீழ், பல்வேறு படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது. இளங்கலை பட்ட படிப்பு, தொழில் முறை இளங்கலை பட்டம், அட்வான்ஸ்டு டிப்ளமோ, Post Graduate diplamo மற்றும் பிற டிப்ளமோ படிப்புகள், பிசிஏ ஹானர்ஸ், பிபிஏ ஹானர்ஸ் உள்ளிட்ட படிப்புகளில் சேர்வதற்கான ஆன்லைன் சேர்க்கை இம்மாதம் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக செய்திக்குறிப்பு ஒன்றில்

தெரிவிக்கப் பட்டுள்ளது. இத்தகைய படிப்புளில் சேர விரும்பும் மாணவர்கள் சமுதாய கல்லூரியின் இணையதளமான pucc.edu.in என்ற வெப் போர்ட்டலுக்குள் சென்று சேர்க்கை கையேடு மற்றும் ஆன்லைன் பதிவு குறித்த விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.

**இலங்கை-இந்தியா (16)**

ஈரானில் சிக்கித் தவித்த இலங்கை நாட்டினர் பாதுகாப்பாக வெளியேற உதவிய இந்திய அரசாங்கத்திற்கு இலங்கை நன்றி தெரிவித்துள்ளது. இதுகுறித்து எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டுள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜிதா ஹெராத், இந்தியாவின் இந்த உதவி இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான இணக்கம் மற்றும் நட்புறவை வெளிப்படுத்துவதாகவும், இதற்காக இலங்கை மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானில் தற்போது நிலவி வரும் போர் சூழலுக்கு இடையில், அங்கே சிக்கியுள்ள இந்தியர்களை பாதுகாப்பாக மீட்க ஆபரேஷன் சிந்து நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், இலங்கை மற்றும் நேபாள நாடுகளின் கோரிக்கைகளுக்கு இணங்க, அந்நாட்டவரையும் மீட்கும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபட்டுள்ளது. தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்தின் இந்த நடவடிக்கை, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் இக்கட்டான காலகட்டங்களில் அண்டை

நாடுகளுடனான மனித நேயத்தை மறு உறுதிப்படுத்தும் இந்தியாவின் அர்ப்பணிப்பு செயலாக பார்க்கப்படுகிறது.

<u>**பஹல்காம்**(13)</u>

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாக கருதப்படும் இரண்டு பேரை தேசிய புலனாய்வு முகமை – என்ஐஏ, சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது. பஹல்காமின் பாத்கோட் மற்றும் ஹில் பார்க் பகுதியை சேர்ந்த பர்வேஸ் அகமது ஜோதர் மற்றும் பஷீர் அகமது ஜோதர் ஆகிய இருவரை கைது செய்து, விசாரணை நடத்திய தேசிய புலனாய்வு முகமை, ஆயுதம் ஏந்தி பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்ட மூன்று பேர் பற்றிய விவரங்கள் தெரியவந்துள்ளதாகவும், அவர்கள் லஷ்கரே தொய்பா பயங்கரவாத இயக்கத்தோடு தொடர்புடைய பாகிஸ்தானியர்கள் என்றும் தெரிவித்துள்ளது. என்ஐஏ வால் கைது செய்யப்பட்டுள்ள பர்வேஸ் மற்றும் பஷீர், இந்த பயங்கரவாதிகளுக்கு ஹில் பார்க்கில் உள்ள ஒரு குடிசையில் புகலிடம் தந்ததோடு, உணவு மற்றும் தளவாட உதவிகளையும் செய்ததாக தெரிவித்துள்ளது.

<u>கிரிக்கெட் (7)</u>

2026 ஐசிசி ஆடவர் டி-20 உலகக் கோப்பை ஆட்டத்திற்கு கனடா தகுதி பெற்றுள்ளது. கனடாவின் வொன்டாரியோ நகரத்தில், பஹாமஸ் அணிக்கு

எதிராக நேற்று நடைபெற்ற போட்டியில் கனடா அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 2026 ஐசிசி ஆடவர் டி-20 உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. 20 அணிகள் பங்கேற்கும் இந்த போட்டியில் விளையாட, இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட 13 அணிகள் ஏற்கனவே தகுதி பெற்றுள்ளன.

**வானிலை (6)**

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்றும், நாளையும் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் புதுவை-காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 3 நாட்களுக்கு இந்த பகுதிகளில் வெப்ப நிலை இயல்பை விட 2-3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

**ஈரான் கண்டனம் (8)**

இஸ்ரேல் படைகளுடன் சேர்ந்து, ஈரானின் அணுசக்தி அமைப்புகள் மீது அமெரிக்க படைகள் துல்லிய தாக்குதலில் ஈடுபடுவது கண்டனத்திற்கு உரியது என்று ஈரான் குற்றம் சாட்டி உள்ளது. ஈரான் நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு சையது அப்பாஸ் அராக்சி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ஈரானின் Fordow, Natanz மற்றும் Esfahan அணு தளங்கள் மீது

இஸ்ரேலுடன் இணைந்து கூட்டு தாக்குதலில் ஈடுபட்ட அமெரிக்கா, சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐநா சாசனங்களை மீறியுள்ளதாகவும், இதனால் மோசமான பின் விளைவுகளை அமெரிக்கா எதிர் கொள்ள நேரிடும் என்றும் தெரிவித்துள்ளார்.